දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

# பொதுக்கலை மாணி (வெளிவாரி பழைய பாடத்திட்டம்) பரீட்சை (ஒக்டோபர்2019)

## பொருளியல் III
## ECG 3 பிரயோகப் பொருளியல்

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
இவ்வினாத்தாளில் உள்ள மொத்த வினாக்களின் எண்ணிக்கை 10
ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகள், அதற்கேற்ப, குறிப்பிடப்பட்டுள்ளன
(நேரம்: மூன்று மணித்தியாலங்கள்)

1. (i) 1977 இல் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான பொருளாதார சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)
   (ii) இலங்கைப் பொருளாதாரத்தின்மீது, இச்சீர்திருத்தங்கள் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியிருந்துள்ளன என்பதனை ஆராய்க. (12 புள்ளிகள்)

2. (i) வறுமை என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (04 புள்ளிகள்)
   (ii) இலங்கையில் வறுமைக்கான காரணங்களைச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)
   (iii) "1990 இலிருந்து இலங்கையில் வறுமையானது வீழ்ச்சியடைந்து வந்துள்ளது." இக்கூற்றினை நீர் ஏற்பீரா? விளக்குக. (08 புள்ளிகள்)

3. (i) இலங்கையில் சமூக நலச் செலவீட்டின் போக்கினைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)
   (ii) சமூக நலச் செலவீட்டின் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக (05 புள்ளிகள்)
   (iii) ஐந்து சமூக அபிவிருத்திக் குறிகாட்டிகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

4. (i) 'வேலையின்மை' என்பதனால் கருதப்படுவது யாது? (05 புள்ளிகள்)
   (ii) இலங்கையில் வேலையின்மை காணப்படுவதற்கான பிரதான காரணங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)
   (iii) "இலங்கையின் வேலையின்மை 5 சதவீதத்தினைவிடவும் குறைவாக இருப்பதனால், இலங்கையில் வேலையின்மைப் பிரச்சினை ஏதுமில்லை" இக்கூற்றினை நுணுக்கமாக ஆராய்க. (10 புள்ளிகள்)

5. (i) கடந்த நான்கு தசாப்த காலமாக இலங்கையில், சனத்தொகை வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)
   (ii) சுதந்திரமடைந்த காலப்பகுதியிலிருந்து, இலங்கையில், சனத்தொகை வளர்ச்சியின் பொருளாதார தாக்க விளைவுகளைப் பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

6. (i) இலங்கையின் கைத்தொழில் (இரண்டாம் நிலை), சேவைகள் (மூன்றாம் நிலை) துறைகளின் பிரதான உள்ளடக்கக் கூறுகளை விபரிக்குக. (10 புள்ளிகள்)
   (ii) ஒரு நவீன பொருளாதாரத்தில், ஒவ்வொரு துறையின் செயலாற்றமும், மற்றைய ஒவ்வொரு துறையின்மீதும் எந்தளவுக்குத் தங்கியுள்ளது? உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

7. (i) இலங்கையில், விவசாயத்துறையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் யாவை? (10 புள்ளிகள்)

(ii) இலங்கையில், விவசாயத்துறையின்மீது, இக்கொள்கைகளின் தாக்க விளைவுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

8. (i) 'வர்த்தக நிலுவைக்கும்' 'நடைமுறைக் கணக்கு நிலுவைக்கும்' இடையிலான வேறுபாடுகள் யாவை? (05 புள்ளிகள்)

(ii) 1977 இற்குப் பின்னர் இலங்கையின், சென்மதி நிலுவைப் பிரச்சினைக்குப் பொறுப்பாக இருந்துள்ள உள்வாரியானதும், வெளிவாரியானதுமான காரணிகளை ஆராய்க. (15 புள்ளிகள்)

9. (i) "இலங்கையின் பாரிய பாதீட்டு பற்றாக் குறைக்கான பிரதான காரணம் அரசாங்கச் செலவீட்டிலான மிகப் பெரிய அதிகரிப்பே ஆகும்." ஆராய்க. (10 புள்ளிகள்)

(ii) இலங்கையில் பாதீட்டிப் பற்றாக் குறையினை நிதியீட்டம் செய்வதற்குச் சந்தைக் கடன்பாடுகளைப் பயன்படுத்தியதன் தாக்கங்கள் எவை? விளக்குக. (10 புள்ளிகள்)

10. இலங்கை தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எவையேனும் <u>நான்கினைப்</u> பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக:

(அ) வருமான சமத்துவமின்மை
(ஆ) ஏற்றுமதியின் உள்ளடக்கக் கூறுகள்
(இ) சேவைத்துறையின் முக்கியத்துவம்
(ஈ) பெறுமதி சேர் வரி
(உ) பொருளாதார வளர்ச்சி
(ஊ) வறுமைக் குறைப்பு உபாயங்கள் (தலா 05 புள்ளிகள்)

---